பக்கங்கள்: 05

THEEMPUNAL
# தீம்புனல்
மாலைப் பதிப்பு

WILD FOREST FOUNDATION wild-forest.org

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:43 | 02.01.2024 செவ்வாய்க்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053





# யாழ்ப்பாணத்தில் தீவிரமடையும் டெங்கின் தாக்கம்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகமானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வடமாகாணத்தில் பல மாவட்டங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் தீவிரமாக அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று திங்கட்கிழமை [1] மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்ப்பாண வைத்தியசாலை பணிப்பாளருமான வைத்தியர் த.சத்தியமூர்த்தி ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி அதிகரித்துள்ள டெங்கு தாக்கம் தொடர்பிலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் உட்பட பல வேறு விடயங்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த சுகாதார திணைக்களம், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவம் ஆகியோரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்காதவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நான்கு பிரதேச செயலாளர் பிரிவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி சிரமதானப்பணிகள் மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது.

# புதுவருட பூகம்பத்தில் 48 பேர் பலி



2024 ஆம் ஆண்டின் முதல் நாளான நேற்று ஜப்பானில் ஏற்பட்ட தொடர்ச்சியான பூகம்பங்களால் குறைந்தது 48 பேர் உயிரிழந்தனர். நேற்று முதல் ஜப்பானில் 155 நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

7.6 ரிக்டர் அளவுடன் ஆரம்பித்த இத்தொடர் நிலநடுக்கங்களில் 6க்கும் அதிகமான பெரும் நிலநடுக்கங்களும் அடங்கும்.

ஆரம்ப நிலநடுக்கம் ஏற்பட்ட உடனேயே அதிகாரிகள் சுனாமி எச்சரிக்கைகளை விடுத்தனர்.

அதன் பிறகு, 5 அடி உயர அலைகள் ஜப்பானைத் தாக்கியது.

மேலும், இந்தப் பேரழிவால் ஏறக்குறைய 33,000 குடும்பங்கள் மின்சாரம் இல்லாமல் தவித்து வருகின்றன.

முக்கிய நெடுஞ்சாலைகள் உட்பட நாடு முழுவதும் பல முக்கிய வழித்தடங்கள் செயல்படவில்லை. இதனால் மருத்துவர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் மீட்பு சேவைகளில் சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர். ஜப்பானில் பெரும் பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன, குறைந்தது 48 பேர் இறந்துள்ளனர் மற்றும் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்பதற்காக அவசர சேவைகள் “காலத்திற்கு எதிரான போரை” எதிர்கொள்கின்றன.

இன்று காலை நிலவரப்படி அனைத்து சுனாமி எச்சரிக்கைகளும் குறைக்கப்பட்டுள்ளன, ஆனால் மேலும் நிலநடுக்கம் ஏற்படக்கூடும் என்ற எச்சரிக்கைகள் உள்ளன

# கெஹேலியவின் வீட்டின் முன் வைக்கப்பட்ட மலர் வளையம்



முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெலவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன் நேற்று [1] மலர் வளையம் வைக்கப்பட்டது. எனினும் பொலிஸாரினால் மலர் வளையம் உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியர் சமல் சஞ்ஜீவ மற்றும் சமூக செயற்பாட்டாளர் சஞ்ஜய மாவத்த உள்ளிட்ட சிலர், கெஹேலிய ரம்புக்வெலவின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு முன்னால் வைப்பதற்கு மலர் வளையமொன்றை எடுத்துச் சென்றனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மலர் வளையத்தை அங்கிருந்து அகற்றினர்.

# ஜப்பானில் தீப்பிடித்து எரிந்த விமானம்

டோக்கியோ (Tokyo-Haneda Airport) விமான நிலையத்தில் கடலோர காவல் படை விமானத்துடன் மோதி ஜப்பான் ஏர் லைன்ஸ் விமானம் தீப்பிடித்து எரிந்தது.

மீட்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு விமானத்தில் இருந்த 400க்கும் மேற்பட்ட பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

ஜப்பான் ஏர்லைன்ஸ் விமானம் இன்று (02) டோக்கியோவில் ஹனேடா விமான நிலையத்தின் ஓடுதளத்தில் தரையிறங்கும்போது தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது.

என்.ஹெச்.கே எனும் ஜப்பானிய அரசு ஊடகத்தில் அதன் காணொளி வெளியானது. அதில், விமானத்தின் ஜன்னல்கள் மற்றும் அதன் கீழே தீப் பிடித்து எரிவதைக் காண முடிந்தது. விமானத்தின் ஓடு தளத்திலும் தீ பரவியது.

# நியூஸிலாந்தில் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம்

நியூஸிலாந்தின் வெலிங்டனில் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் தெரிவித்தார்.

# ரோஹிங்கியா அகதிகளின் அமைதிப் போராட்டம்

இலங்கையிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகம் மூடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து இலங்கையிலுள்ள ரோஹிங்கியா அகதிகளினால் இன்று (02) அமைதி வழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணைய காரியாலயத்தின் முன்பாக பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணைய காரியாலயத்தை மூடுவதால், ரோஹிங்கியா அகதிகள் வேறொரு நாட்டிற்கு நிரந்தரமாக மீள்குடியேற்றம் செய்யப்படுவதோடு, உணவு, வீடுகள் போன்ற வற்றுக்கான மாதாந்த கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# ஆறு மாதங்களுக்குள் வடக்கில் போதைப்பொருள் ஒழிக்கப்படும்

வடக்கில் ஆறு மாதங்களுக்கிடையில் போதைப் பொருள் ஒழிக்கப்படும் என வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த குணரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டு தற்போது பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள்.

நாடளாவிய ரீதியில் தற்போது மேற்கொள்ளப்படும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களுக்கு எதிரான விசேட நடவடிக்கை வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை, போதைப்பொருள் நுகர்வு ஆகியவற்றில் ஈடுபடுவோர் கைது செய்யப்படுகின்றனர்.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையால் வடக்கில் 90 சதவீதம் குற்றச் செயல்கள் சடுதியாகக் குறைந்துள்ளன.

குற்றச் செயல்களில் ஈடுபடும் மற்றும் போதைப் பொருள் வியாபாரத்தில் தொடர்புடையவர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றார்.


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.


அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# வட் வரியால் இலாபமீட்டும் வர்த்தகர்கள்

2024 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து வட் வரி அதிகரிப்பு அமுலுக்கு வருகிறது. சில வர்த்தகர்கள் வட் வரியைத் தமக்குச் சாதமாக மாற்றியமைத்துள்ளனர். சட்டப்படி அவர்களை எதுவும் செய்ய முடியாது.

வட் வரி அமுலுக்கு வருவதற்கு முன்னரே வட் வரி இல்லாமல் பல பொருட்களை இறக்குமதி செய்துள்ளனர். விற்கும் போது அவற்றுக்கு வட் வரி அறவிடுவார்கள்.

ஜனவரி 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த வட் அதிகரிப்பின் தேவையற்ற அனுகூலத்தைப் பெறும் நோக்கில், இலங்கைக்கான இறக்குமதிகள் கடந்த இரண்டு வாரங்களில் பெருமளவு அதிகரித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வட் வரி அதிகரிப்பு மூலம் கலவரமான நீரில் சிலர் மீன் பிடிக்க முயற்சிப்பதாகவும் அங்கு தேவையற்ற இலாபம் பெறும் நோக்கில் நாட்டின் தேவைக்கு அதிகமாக பொருட்களை இறக்குமதி செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களில் இறக்குமதிகள் 50 முதல் 60 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த அவர், நாளாந்தம் நாட்டிற்கு கொண்டுவரப்படும் கொள்கலன்களின் எண்ணிக்கை சுமார் 700 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கை துறைமுகங்களுக்கு தினசரி அதிகபட்ச கொள்கலன்கள் 1,000 சென்றடையும், கடந்த இரண்டு வாரங்களில் அது 1,700 ஆக உயர்ந்துள்ளது. இது ஒரு அசாதாரண மற்றும் எதிர்பாராத அதிகரிப்பு ஆகும். இந்த விலை உயர்வு பண்டிகை கால தேவையைப் பூர்த்தி செய்ய அல்ல, ஏனெனில் பண்டிகை காலத்திற்கான இறக்குமதி ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் செய்யப்பட்டது. இந்த அதிகரிக்கப்பட்ட இறக்குமதிகள் வட் வரி உயர்வை சாதகமாக்கிக் கொள்வதற்காக மட்டுமே என்றார்.

சில பொருட்களுக்கு 18 வீத வட் விதிக்கப்பட்டதாகவும், மேலும் சிலவற்றின் மீதான வட் 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், முதலில் வட் இன் கீழ் வந்த பொருட்கள் கடந்த இரண்டு வாரங்களில் பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்டன.

"டைல்ஸ், சோலார் பேனல்கள் போன்ற கட்டுமானப் பொருட்கள் பெரிய அளவில் அதிகரிக்கப்பட்ட பொருட்களில் அடங்கும். சோலார் பேனல்கள் முன்பு வட் இல்லாமல் இருந்தன, ஜனவரி 1 ஆம் திகதிக்குப் பிறகு சோலார் பேனல்கள் மீது 18 சதவிகித வட் விதிக்கப்படுகிறது. இறக்குமதியாளர்கள் ஆதாயம் அடைய முயற்சிக்கின்றனர்," என்றார்.

வட் அதிகரிப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களால் இறக்குமதியாளர்கள் தேவையற்ற நன்மைகளைப் பெறுவதைத் தடுக்க ஏதேனும் பொறிமுறை உள்ளதா? என்று கேட்டதற்கு, அத்தகைய பொறிமுறை இல்லை என்றும், அதற்கு அப்பால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களை மக்களுக்கு தெரிவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் கூறினார்.

"கடந்த இரண்டு வாரங்களில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலை வழங்கவும், நாட்டின் தேவைகளின் பட்டியலை வழங்கவும் நான் சுங்க அதிகாரிகளுக்கு தெரிவித்தேன், இதனால் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் கூடுதல் தொகையை மக்கள் அறிந்து கொள்ள முடியும். இந்த இறக்குமதிகள் மக்களுக்குப் பலனளிக்கவில்லை, தேவையற்ற இலாபத்தைப் பெறுவதற்காகச் செய்யவில்லை" என்றார்.

வட் வரி விதிப்பில் தவறான புரிதல் மற்றும் தவறான தகவல் பரிமாற்றம் இருப்பதாகக் கூறிய அவர், இந்த வாரத்தில் புதிய வட் வரி விதிப்பு குறித்து மக்களுக்கு நன்கு தெரியப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

வட் வரி அதிகரிப்பு தேர்தலின் போது ஜனாதிபதிக்கு எதிராகத் திரும்பும் வாய்ப்பு உள்ளது. இலங்கை மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாது சர்வதேச நாணய நிதியத்தின் விருப்புக்கேற்ப அரசாங்கம் செயற்படுகிறது.

# தென்கொரிய எதிர்க்கட்சித் தலைவர் மீது கத்திகுத்து



தென்கொரியாவின் எதிர்க்கட்சித் தலைவரான லீ ஜே-மியுங் செவ்வாய் அன்று தெற்கு துறைமுக நகரமான பூசானுக்கு சென்றிருந்த போது அடையாளம் தெரியாத ஒரு ஆசாமி அவரது கழுத்தில் கத்தியால் குத்தினார்.

புதிதாக கட்டப்பட இருக்கும் விமான நிலையத்தை சுற்றிப்பார்க்க லீ ஜே-மியுங் பூசானுக்கு சென்றிருந்த போது, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் லீ ஜே-மியுங்கின் இடது கழுத்தில் கத்தியால் குத்தினார்.

அத்தாக்குதலை நடத்தியவர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

தாக்குதல் நடத்தியவர், லீயின் பெயர் பொறிக்கப்பட்ட காகித கிரீடத்தை அணிந்திருந்த 50 அல்லது 60 வயது மதிக்கத்தக்க நபர் ஆவார்.

ஆதரவாளர்கள் மற்றும் செய்தியாளர்களின் கூட்டத்திற்கு மத்தியில் லீ ஜே-மியுங் நின்று கொண்டிருந்த போது, இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது.

# இம்ரான் கானின் வேட்பு மனுக்கள் நிராகரிப்பு



பாகிஸ்தானில் வரும் பெப்ரவரி மாதம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற இருப்பதை அடுத்து இம்ரான் கான் போட்டியிட மனுக்கள் அளித்ததாகவும் ஆனால், அந்த மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த இம்ரான் கான் பதவிக் காலத்தில் பரிசு பொருட்களை பெற்றதாக வழக்கு தொடரப்பட்ட நிலையில் அவருக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேல்முறையீட்டில் அச்சிறைத் தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டாலும் ரகசிய தகவல்களை அவர் கசியவிட்டதாக கூறி மீண்டும் கைது செய்யப்பட்டதால் அவர் தற்போது சிறையில் உள்ளார். இந்த நிலையில் இம்ரான் கான் ஐந்து ஆண்டுகள் தேர்தலில் போட்டியிட அந்நாட்டு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இந்த நிலையில் பெப்ரவரி 8 ஆம் திகதி பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற உள்ளதை அடுத்து சிறையில் இருந்து அவர் லாகூர் மியான்வாலி ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார். ஆனால் அந்த இரண்டு வேட்புமனுக்களையும் தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவுக்கான விஸாவை இரத்து செய்தது தாய்லாந்து

2024 ஆம் ஆண்டு மார்ச் 1 முதல் சீன குடிமக்களுக்கான விஸா தேவைகளை தாய்லாந்து நிரந்தரமாக இரத்து செய்யும் என்று தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் செவ்வாய்க்கிழமை அறிவித்தார். சீனக் குடிமக்களுக்கு மார்ச் முதல் நிரந்தர விஸா இல்லாத கொள்கையை அரசாங்கம் இப்போது கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளது.

இந்த நடவடிக்கை தாய்லாந்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் மேலும் முன்னேற்றத்தைக் குறிக்கும் என்று அவர் கூறினார்.

தாய்லாந்தின் பொருளாதாரத்தில் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது, 2023 இல் 28 மில்லியன் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளது, இதில் மலேசியாவில் இருந்து சுமார் 4.4 மில்லியன், சீனாவிலிருந்து 3.4 மில்லியன் மக்கள் சென்றுள்ளனர்.

# நெதர்லாந்தில் 200 பேர் கைது

நெதர்லாந்தில் புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட குழப்பத்தின் போது சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டதாகவும் காவல் துறை அதிகாரிகள் பலர் காயமடைந்ததாகவும் நெதர்லாந்து பொலிஸார் திங்கட்கிழமை தெரிவித்தனர். ஆம்ஸ்டர்டாம், ரோட்டர்டாம் மற்றும் ஐந்தோவன் உள்ளிட்ட 16 டச்சு நகராட்சிகளில் புத்தாண்டு தினத்தன்று பட்டாசு வெடிக்க தடை விதிக்கப்பட்டது. இருப்பினும், தடை பலரால் நிராகரிக்கப்பட்டது.

பல்வேறு இடங்களில், குறிப்பாக தி ஹேக், ரோட்டர்டாம், ஆம்ஸ்டர்டாம் மற்றும் டெல்ஃப்ட் ஆகிய இடங்களில், பொலிஸார் கடுமையான வானவேடிக்கைகளால் தாக்கப்பட்டனர். நேற்றிரவு, முக்கியமாக பட்டாசு வெடித்ததில் டஜன் கணக்கான அதிகாரிகள் காயமடைந்ததாக முதற்கட்ட புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

ஹார்லெமில், நள்ளிரவுக்கு சற்று முன்பு 19 வயது இளைஞன் பட்டாசு வெடித்து கொல்லப்பட்டான்.

## மத்திய வங்கி ஆளுநரின் கணிப்பு



2024 ஆம் ஆண்டில் 3 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் நடாத்தப்பட்ட "2024 மற்றும் நாட்டின் பொருளாதாரம்" என்ற விசேட கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், பணவீக்கத்தை 5 சதவீதமாக பேண எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

## அதி விஷேச தென்னஞ் சாராய விலை அதிகரிப்பு

அதிவிசேஷ சாராயம் மற்றும் தென்னஞ் சாராயம் ஆகிய மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஒரு போத்தல் அதிவிசேஷ, தென்னஞ் சாராயம் 400 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கலால் வரி மற்றும் வட் வரி அதிகரிப்பிற்கு அமைய இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக Distilleries Company of Sri Lanka PLC தெரிவித்துள்ளது.

## யுக்திய நடவடிக்கையால் மேலும் 822 பேர் கைது

நாடளாவிய ரீதியில் 'யுக்திய' பொலிஸ் நடவடிக்கையின் கீழ் நேற்று (01) முதல் இன்று (02) அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 822 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது, 273 கிராம் ஹெரோயின், 111 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 426 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## பருத்தித்துறையில் மலையகத்தைச் சேர்ந்த இருவர் பலி

பருத்தித்துறை முனைப் பகுதியில் களஞ்சியசாலையொன்றில் இன்று (02) அதிகாலை இடம்பெற்ற தீ விபத்தில் மலையகத்தின் உடப்புசல்லாவ பிள்ளையார் லோமன் தோட்டத்தைச் சேர்ந்த வேலாயுதம் புவனேஸ்வரம், வேலாயுதம் ரவி ஆகிய இருவரும் தீயில் கருகி மரணமானார்கள். பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## விசேட தேவையுடைய பிள்ளைகளை பதிவு செய்வது கட்டாயம்

விசேட தேவையுடைய பிள்ளைகளை வலயக் கல்வி அலுவலகங்களில் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்தக் குழந்தைகளுக்கு முறையான கல்வியை வழங்கும் நோக்கில் இது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குழந்தையின் சிறப்புத் தேவைகளைப் பொறுத்து, அவர்கள் வீட்டில் கற்பிக்கப்படுகிறார்கள் அல்லது பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அந்தப் பிள்ளைகளை உரிய வயதில் பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு அனுப்புவது தொடர்பான பாடத் திட்டத்தையும் அமைச்சு தயாரித்து மதிப்பீட்டுக் குழுக்களுக்கு வழங்கியுள்ளது. இன்று முதல் பதிவு செய்யப்படும் பிள்ளைகள் பாடத் திட்டத்தின்படி கற்பிக்கப்படுவார்கள் என்றும் அங்கு காட்டப்படும் போக்குகளின் அடிப்படையில் முதலாம் தரத்திற்கு உள்வாங்கப்படுவார்கள் என்றும் அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இலங்கையில் ஒளியியல் மாயையுடன் கூடிய வீதி



இலங்கையில் முதன்முறையாக, ஒளியியல் மாயையுடன் கூடிய வீதியை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் அதுல சேனாரத்ன கண்டுபிடித்துள்ளார்.

நாவுல - எலஹெர பிரதான வீதியில் மொரகஹ கந்த நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள பகுதியில் இந்த வீதிப்பகுதி காணப்படுகிறது.

இது குறித்து முன்னாள் இராணுவ கேணல் ரத்னபிரிய பந்து காணொளி மூலம் பேராசிரியைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

நேற்று காலை (01) அவ்விடத்தை பார்வையிட்ட பேராசிரியர், இலங்கையில் இவ்வாறானதொரு இடம் காணப்படுவது இதுவே முதல் முறை எனவும் வேறு பல நாடுகளில் இதுபோன்ற இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த இடம் பார்ப்பதற்கு மேடு போல் இருந்தாலும் உண்மையில் இது ஒரு பள்ளத்தாக்கு என்று பேராசிரியர் விளக்கினார்.

## 2024 ஆம் ஆண்டிற்கான கடமை நடவடிக்கைகளை ஆரம்பித்தல்

புதிய ஆண்டின் 2024 இற்கான அரசாங்க சேவை சத்தியப் பிரமாணம் செய்யும் நிகழ்வு (01) நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

"வலுவான எதிர்காலத்துக்கான தொடக்கவுரை" என்ற தொனிப் பொருளின் கீழ், தற்போதைய சர்வதேச போக்குக்கு அமைவாக புதிய பொருளாதாரச் செயன்முறையொன்றுக்கான அடிப்படையை வழங்கி ஜனாதிபதியால் 2024 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு முன்வைக்கப்படுகின்ற விடயங்களின் வாயிலாக, எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு, அரச சேவையிலுள்ள எங்கள் அனைவருக்கும் புதிய எதிர்பார்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்.

வரலாற்றில் முன்னொருபோதும் அனுபவித்திராத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவாறு முன்னோக்கிப் பயணிக்கும் இக்காலப் பகுதியில், உலகில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த நாடுகள் அந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கு அறிமுகப்படுத்திய மறுசீரமைப்புக்கள் பற்றி ஆராய்ந்து, பொது மக்களுக்கான சேவை வழங்களின் வினைத்திறன் உறுதிப்படுத்தப்படுகின்ற அத்தியாவசியமான மறுசீரமைப்புக்களை அரச சேவையில் அறிமுகப்படுத்தி, அரச செலவுகளைக் குறைத்தல் மற்றும் அரச வருமானத்தை அதிகரித்தலின் மீது நீங்கள் அனைவரும் முன்னரைவிடக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இந்நிகழ்வில் நிலாவெளி மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

## நாளை முதல் மின்சார சபை ஊழியர்கள் போராட்டம்



மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான உத்தேச சட்டமூலத்திற்கு எதிராக நாளை (03) முதல் மூன்று நாள் எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு மின் துறை அமைச்சருக்கு அறிவிக்கவுள்ளதாக அதன் பிரதம செயலாளர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

# டோஹாவில் 2024 உலக நீர்வாழ் சம்பியன்ஷிப் போட்டி

உலக நீர்வாழ் சம்பியன்ஷிப் போட்டி பெப்ரவரி 2 முதல் 18 வரை கட்டார் தலைநகரில் நடைபெறவுள்ளது, இதில் உலகெங்கிலும் உள்ள 190க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 2,500க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுகின்றனர்.

உலகக் கிண்ண உதைபந்தாட்டம், ஃபார்முலா 1, Moto GP, முக்கிய டென்னிஸ் மற்றும் கோல்ஃப் போட்டிகள் ஆகியவற்றை வெற்றிகரமாக நடத்திய கட்டாரில் முதன் முதலாக உலக நீர்வாழ் சம்பியன்ஷிப் போட்டி நடைபெற உள்ளது. 2027 ஆம் ஆண்டு உலக கூடைப் பந்துப் போட்டியை நடத்த கட்டார் தயாராக உள்ளது.

டோஹா, முதன்மையான நீர் விளையாட்டு நிகழ்வுக்கு தேவையான அனைத்து வசதிகளுடன் மூன்று முக்கிய வசதிகளை வழங்கும். சமீபத்திய ஆண்டுகளில், மறக்க முடியாத 2022 பீபா உலகக் கிண்ணம், ஃபார்முலா 1Moto GP, முக்கிய டென்னிஸ் , கோல்ஃப் போட்டிகள் நடைபெற்றன. 2027 உலக கூடைப்பந்து சம்பியன்ஷிப் நடைபெற உள்ளது.

ஆஸ்பயர் டோம், ஹமாத் நீர்வாழ் மையம், தோஹா பழைய துறைமுகம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. டிக்கெட்டுகள் வெறும் $10 இல் தொடங்குகின்றன. போட்டியின் முதல் நாட்களைத் தொடர்ந்து பெப்ரவரி 4 ஆம் திகதி ஆஸ்பியர் டோமில் திறப்பு விழா நடைபெறும், இதில் கலை நீச்சல் மற்றும் டைவிங் முறையே ஆஸ்பியர் டோம் மற்றும் ஹமாத் ஆகியன நீர்வாழ் மையத்தில் நடைபெறும். டிக்கெட்டுகளை தனிப்பட்ட நிகழ்வுகளுக்காகவோ அல்லது பல அமர்வுகளுக்கான பாஸ்களாகவோ வாங்கலாம்

டோஹா 2024 டிக்கெட் விற்பனைக் காலத்தில், வகை 1, வகை 2 மற்றும் மல்டி-செஷன் பாஸ் ஆகிய மூன்று டிக்கெட் வகைகள் வழங்கப்படுகின்றன. வகை 1 ஆனது QAR 35 முதல் QAR 200 ($10-80) வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வகை 2 டிக்கெட்டுகளின் விலை QAR 20 ($5) மற்றும் மல்டி-செஷன் பாஸ், போட்டியின் ஒரே நாளில் அவர்கள் தேர்ந்தெடுத்த விளையாட்டின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளில் கலந்துகொள்ள விரும்பும் பார்வையாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது, இதன் விலை QAR 200 ($50) ஆகும்.



# ஜொனாதன் ட்ராட்டின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது



ஆப்கானிஸ்தான் தேசிய அணியின் தலைமை பயிற்சியாளரான ஜொனாதன் ட்ராட்டின் ஒப்பந்தத்தை 2024 ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அவரது வெற்றிகரமான 18 மாத பதவிக்காலத்திற்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது. அவர் அணியின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தார்.

தென்னாபிரிக்காவில் பிறந்த முன்னாள் இங்கிலாந்து கிரிக்கெட் வீரரை, ஜூலை 2022 இல் தேசிய அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமித்தது.

அவரது தலைமையின் கீழ், அணி குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது மற்றும் 2022 ஆம் ஆண்டு ரி20 ஆசியக் கோப்பையில், அதன் முதல் சர்வதேசப் போட்டியில் அணியின் சிறப்பான செயல்பாடு உட்பட பல வெற்றிகளைப் பெற்றது. பாகிஸ்தானுக்கு எதிரான ரி20 தொடர் வெற்றி, பங்களாதேஷுக்கு எதிரான முதல் 50 ஓவர் தொடர் வெற்றி, 2023 உலகக்கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகியவற்றைத் தோற்கடித்தது.

ஆப்கானிஸ்தான் அணி தற்போது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடி வருகிறது.

இதைத் தொடர்ந்து, இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது, அங்கு அவர்கள் ஜனவரி 11 முதல் 17 வரை மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இந்தியாவுடன் விளையாடும்.

# 25 வயதில் ஓய்வு பெறும் மலேசிய டேக்வாண்டோ நட்சத்திரம்



மலேசிய டேக்வாண்டோ பயிற்சியாளர் நூருல் ஹிதாயா அப்துல் கரீம் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்ததாக தி நியூ ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

பூம்சே ராணி என்று அவரது தாயகத்தில் அறியப்படும் ஹிதாயாவின் முடிவுக்கான முக்கிய காரணம் காயங்கள் ஆகும். ஹிதாயாவின் கடைசி சர்வதேச போட்டி 2023 செப்ரெம்பரில் ஹாங்சோ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இருந்தது, அங்கு அவர் காலிறுதியில் இருந்து வெளியேறினார்.

2019 மணிலா கடல் விளையாட்டுப் போட்டியில் மலேசியாவின் ஒரே டேக்வாண்டோ தங்கத்திற்கான கலப்பு ஜோடி நிகழ்வை வெல்ல ஜேசன் லூவுடன் இணைந்த பிறகு ஹிதாயா காட்சியில் நுழைந்தார். 2022 கோயாங் உலக டேக்வாண்டோ பூம்சே சாம்பியன்ஷிப்பில் 30 வயதுக்குட்பட்ட கலப்பு ஜோடியில் ஹிதாயா மற்றும் ஜேசன் வெள்ளிப் பதக்கம் வென்றனர். கோயாங்கில் நடந்த 30 வயதுக்குட்பட்ட பெண் அணியில் வெண்கலப் பதக்கம் வெல்வதற்காக அவர் தனது தங்கையான நூர் ஹூமைராவுடன் இணைந்தார்.

மே 2023 இல் புனோம் பென் சீ கேம்ஸில் ஜேசனுடன் கலப்பு ஜோடி தங்கம் வென்ற பிறகு, தென்கிழக்கு ஆசியாவில் தான் இன்னும் சிறந்தவர் என்பதை ஹிதாயா நிரூபித்தார். அவர் பயிற்சியாளராக இருக்க திட்டமிட்டுள்ளார், மேலும் பயிற்சி உரிமங்கள் மற்றும் விளையாட்டு அறிவியல் போன்ற படிப்புகளில் கவனம் செலுத்துவார்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 02.01.2024 அன்று வெளியிடப்பட்டது.